அவ்வளவையும் செயற்படுத்துகிறோம். ஆகவேதான் அதுசம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்தேன். முழுவதுமாகப் பரிசீலித்து, இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து அதற்கென்று முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 109, திரு. ஆ. அறிவழகன், இருக்கையில் இல்லை.

வினா எண் 110, திரு .செ. து. வரதராஜன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

110-

செங்கற்பட்டில் வீடு கட்ட கடன் உதவி வழங்குதல்

* 22312—**திரு. செ. து. வரதராஜன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரில் வீடு கட்டும் சங்கம் கையகப்படுத்தியுள்ள நிலத்தில் பொது மக்களுக்குக் கடன் உதவியோடு வீடு கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யும் வகையில் செங்கற்பட்டு நகரில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் கையகப்படுத்தியுள்ள நிலம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 111, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

111-

தென்னாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நவீன தெளிப்பான்களை வழங்குதல்

* 23694—**திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் போட்டோ வோல்டிக் மூலம் இயங்கும் தெளிப்பான்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

1994 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போட்டோ வோல்டிக் மூலம் இயங்கும் தெளிப்பான் இன்னும் உபயோகத்திற்கு வரவில்லை. இவை இன்னும் சோதனை நிலையிலேயே உள்ளன. சோதனைகள் வெற்றி பெற்று தயாரிப்பு நிறுவனங்கள் இதனை விநியோகத்திற்குத் தயார் நிலைப்படுத்துகையில் இத்தகைய தெளிப்பான்களை மானியத்தில் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போட்டோ வோல்டிக் என்பது சோலார் முறையில், அதாவது சூரிய ஒளியில் அந்த சக்தி தயாரிக்கப்பட்டு அதன்மூலம் இயக்கக்கூடிய தெளிப்பான் ஆகும். விவசாயிகள், பெட்ரோல், மண்ணெண்ணெய் இல்லாமல் மிக எளிதாக, அதிக செலவு இல்லாமல் சிக்கனமாக இயக்கி தனது பயிர்களைப் பாதுகாக்க முடியும். எனவே, இதை உடனடியாக, பரிட்சார்த்தமான முறையில், அந்த ஆய்வகம் வெளியிட்ட பிறகு, எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் விநியோகிக்க அரசு முன் வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, இந்தப் பரிசோதனை ஆய்விலே இருக்கிறது. ஆய்விலே வெற்றி பெற்றவுடன் இது விற்பனைக்கு வருகின்ற காலத்தில், இதனை மானிய விலையில் தென்னாற்காடு மாவட்டத்திற்கும் தருவதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே முறையைப் பயன்படுத்தி, அதாவது சோலார் முறையில் விவசாயிகள் பம்ப்செட் இயக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புதிய தொழில் நுட்பங்களை விவசாயத் தொழிலுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற மிகுந்த அக்கறையோடு செயல்படுத்திக் கொண்டு வரக்கூடிய அரசுதான் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு. எனவே, நடப்பு ஆண்டிலே தமிழ்நாடு எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜென்சியின் உதவி பெற்று தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை தமிழகத்திலே 50 விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் சோலாரால், அதாவது சூரிய ஒளியால் இயங்கக் கூடிய நீரேற்று இயந்திரங்களை நிறுவுவதற்கு அரசு முன்வர இருக்கிறது. ஒரு இயந்திரத்தைப் பொருத்துவதற்கு இரண்டு இலட்சம்

ரூபாய் செலவாகிறது. இந்தத் திட்டத்திலே பயன்பெற விரும்புகின்ற விவசாயி முதலாண்டு 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் போதும். தொடர்ந்து அவர்கள் 10 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்தினால் இந்த இயந்திரம் அவர்களுக்கு முழுமையாகச் சொந்தமாக்கப்படும். எனவே, இந்த சீரிய திட்டத்தை இந்த நடப்பு ஆண்டிலே செயல்படுத்துவதற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

112-

பட்டுக்கோட்டையை தொழில் வளர்ச்சி மிக்க நகரமாக்குதல்.

* 9766—**திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையை, ஒரு தொழில் வளர்ச்சி மிக்க நகரமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டையில் தொழில் வளர்ச்சி மையம் துவங்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் பட்டுக்கோட்டை வட்டம் தொழில் வளர்ச்சியில் மிகுந்த பின்தங்கிய வட்டமாக, i.e., industrially most backward taluk என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் துவங்க முன்வந்தால் மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கான விற்பனை வரிச் சலுகை, முதலீட்டு மானியம், மின் கட்டணச் சலுகை போன்ற சலுகைகளை அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையை தொழில் மையமாக அமைப்பதற்கு எதுவும் சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோதிலும், தனியார்கள் முன் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும், அதற்கு நல்ல சலுகைகள் தரப்படும் என்றும் சொன்னார்கள். மிக்க நன்றி. பட்டுக்கோட்டை நகரிலே தனியார் ஒருவர்